வெளியீடு எண் 10.

SOCIETY FOR THE PREVENTION OF CRUELTY TO ANIMALS, MANNARGUDI.

மிருக கஷ்ட விலக்கு சங்கம், (S. P. C. A.) மன்னார்குடி.

தங்கண் மக்களும் தாங்களும் படுதுயர் தமக்கோர்
எங்கண் மக்களும் யாங்களு மென்செய்தோ மினிமேல்
எங்கண் மக்களும் யாங்களு மின்றுறு துயரைத்
தங்கண் மக்களும் நாங்களும் படுவர் சத்தியமே

(விவேகசிந்தாமணி)

[விலை அணா 2]

எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகு
 மிலங்குமுட லுயிரனைத்து மீசன் கோயில்
எவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி
 யிரங்காது கொன்றருந்து மிழிவி னோரை
வவ்வியமன் றூதருந் தண்டஞ் செய்து
 வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறு
 வேதனைசெய் திடுவரென வோது நூலே

(சிவஞான தீபம்)

"அன்பே சிவம்" "ஜீவகாருண்யமே நிறைகோல்"

"நலிதரு சிறிய தெய்வமென் றையோ
 காட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர வாடு பன்றிகுக் குடங்கள்
 பலிக்கடா முதலிய வுயிரைப்
பொலிவுறக் கொண்டே போவதுங் கண்டே
 புந்திநொந் தளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வ வெங் கோயில்
 கண்டகா லத்திலும் பயந்தேன்"

(இராமலிங்க சுவாமிகள்)

புலையனென்னும் புலைதீரப்
 புனலென்னும் புனன் மூழ்கி
யலைகின்ற முழுமூடர்
 அறிவென்ன வறிவென்ன!
புலையன்றன் மலமுண்ணு
 மொமையுண்ணும் புலையர்க்குக்
குலமென்ன நலமென்ன
 கூகூ வென் றனகோழி.

(சிவவாக்கியர்)

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே!

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே!

எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே!

எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!

(தாயுமானவர்)

மிருக கஷ்ட விலக்கு சங்கம், மன்னார்குடி.

மிருக கஷ்ட விலக்கு சங்கம் என்பது என்ன?

இச்சங்கத்துப் பெயர் சொன்னாலே அது குற்றஞ்செய்பவர்களைச் சார்ஜ் செய்வதற்கு மாத்திரம் ஏற்பட்ட சங்கம் என்று உடனே எண்ணப் படுகிறது. அப்படி எண்ணுவது பலவிதத்திலும் பிசகு. மனுஷ்ய சுபாவம் சாதாரணமாய் தன்னலம் கருதுவது. மிருகக்கஷ்டத்தை விலக்கும் நோக்கத்துடன் மாத்திரம் விதிக்கப்படும் சிறு அபாரதங்களைப் பெரிதாக பெருக்கிப்பேசுவது வழக்கம். ஆனால் கடவுள் சிருஷ்டித்த வாயில்லாப் பிராணிகளுக்கு நெடுநாளாக செய்துவருகிற துன்பங்களை முழுதும் மறந்துவிடுவது நலமல்ல. மனுஷ்ய வர்க்கத்தாருக்கு இருக்கும் சட்டரூபமான பாத்தியங்களைப்போல் கனம் கவர்ன்மெண்டார் அவர்களுடைய ஓர்சட்டப்படியே மிருகங்களுக்கும் பாதுகாப்பு சரிவர பெற பாத்தியமுண்டு என்பதை அறியவேண்டும். மனுஷ்யவர்க்கம் செய்யும் அடாத செய்கையின் கேடுகளும், மிருக கஷ்ட விலக்கு சங்கத்தார் செய்து வருகிற கெடுதலில்லாததும் நன்மை யுள்ளதுமான நோக்கங்களும் பாவ புண்ணியங்களைப் பற்றி எண்ணுகிற ஒவ்வொருவருக்கும் நன்கு புலப்படும்.

இச்சங்கத்தார் செய்யும் நன்மைகள் **விதிப்பன, விலக்குவன** என்று இருவகைப்படும்.

விதிப்பன:— 1 விலங்குகளைக் கவனித்துப் பார்த்து மிருக ஆஸ்பத்திரிக்கு வைத்தியத்துக்காக அனுப்புதல், 2 மிருக வைத்தியத்தில் தயாரான இச்சங்கத்து இன்ஸ்பெக்டர்கள் பார்த்த இடத்தில் சிறு நோய்க்கு மருந்து போடுவது, 3 அங்கே சொந்தக்காரர்களிடம் மிருகங்களுக்குப் போட மருந்து கொடுப்பது. 4 ஆஸ்பத்திரியில் வைத்தியம் நடக்கும்போது சொந்தக்காரர் ஏழையானால் சங்கத்தார் சொந்த சிலவில் தீனிபோடுவது. 5 பொதுஜனங்கள் தெரிந்துகொள்ள துண்டு அறிக்கைகள் பிரசுரிப்பது. 6 சங்கத்துக் கொள்கைகளும் மிருகப்படங்களும் கொண்ட கடுதாசிப் பென்சில்களை அடக்கவிலைக்கு பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்காகவும், பொதுஜனங்களுக்காகவும் விற்பது. 7 வருஷாவருஷம் மாட்டுச்சந்தைக் காட்சி ஏற்படுத்தி மிருகங்களை அன்புடன் நன்றாய் வளர்த்த சொந்தக்காரர்களுக்கு அப்பிராணிகளுக்காக பரிசு தாராளமாய் கொடுத்தல். 8 வருவாய்க்குத்தக்கபடி கிழமிருகங்களை அறுப்பவர்களிடமிருந்து வாங்கி சங்கத்துப் பசு மடத்தில் காப்பாற்றல். 9 சந்தைகளிலும் திருவிழாக்களிலும் மிருகங்களைத் துன்புறுத்தாமல் காப்பாற்றும் விஷயமாய் பிரசாரம் செய்தல்.

10 மிருகங்களை வருத்திக் குற்றஞ்செய்பவர்களை சிற்சில சமயங்களில் முன் எச்சரிக்கை செய்தல். 11 பொதுஜனங்கள் உணர தீபப் படக்காட்சி காண்பித்தல் 12 கழுத்துப்புண் உள்ள செக்குமாடுகளை தனியாய் கவனித்து ஆஸ்பத்திரிக்கு வைத்தியம் செய்ய அனுப்புதல். 13 வெய்யிலில் வண்டி மாடுகள் கஷ்டப்படாதபடி வண்டி நிற்கும் இடங்களில் நிழல்தரும் மரங்களை உண்டாக்குவது முதலியன.

விலக்குவன:— 1. மாடுகளைக் கொடுமையாய் நடத்துபவர்களை நீதிஸ்தலத்தின் மூலமாக அபராதம் செய்வித்து கொடுமையை நிறுத்துவது. 2. மிருகங்களும், பட்சிகளும் மனுஷ்ய சுகத்துக்கேயென்றும் இஷ்டப்படி எதும் செய்யலாம் என்றும் எண்ணுகிற இரக்கமற்ற எண்ணத்தை வர வர நீக்குவது. 3. மிருகங்களை நன்ருய் வளர்க்க வற்புறுத்தி கொடுமையால் அவை சீக்குப்பட்டு சீக்கிரம் இறப்பதால் உண்டாகும் கஷ்டத்தை தடுத்தல் முதலியன.

மன்னார்குடி தாலூகா பூருவும் மிருககஷ்ட விலக்கு சட்டம் அமுலில் இருக்கிறது. மன்னார்குடி தாலூகா பூருவும் இச்சங்க ஆதிக்கத்தில் இருக்கிறது. ஆகையால் சகலருக்கும் இதனால் தெரிவிப்பது யாதெனில் பொதுவாக பிராணிகளை துன்புறுத்துவது கொடுமை. அதிலும் மனிதர்களுக்கு உபயோகப்படும் குதிரை, பசு, காளை, எருமை, ஆடு, கழுதை, புரு முதலியவைகளை இம்சிப்பது மிகவும்கொடுமை. கால்தாங்கல், வீக்கம், காளை புண், சோடடித்த புண், வெடிப்பு, சிராயுண்ட காயம், சலக்கட்டி முதலிய வியாதியினால் வருந்தும் குதிரை, மாடு, இவைகளை செக்கு, வண்டி, ஏர், முதலியவைகளில் கட்டுவதும், தாரினால் குத்துவதும், மாடுகளை கொம்புக்கும் முன்காலுக்கும் கயிறுபோட்டு கட்டிவிடுவதும், கழுத்தில் மரக்கட்டைகளை கட்டி ஓட்டுவதும், மாடு, குதிரை, கழுதை முதலியவைகளை முன்னங்கால், மாறுகால் இரண்டையும் சேர்த்துக் கட்டுவதும். ஆடு, மாடுகளின் கால்களை மடக்கியும் பிணைத்தும் இழுத்துச்செல்வதும் ஆடுகளுக்கு கழுத்தில் கிட்டி கட்டுவதும், கோழி முதலிய பட்சிகளின் கால்களைக்கட்டி தலைகீழாகத் தூக்கிச் செல்வதும், நாய்கள், பன்றி முதலிய எந்தப்பிராணிகளையும், அடிப்பதும், வண்டிகளில் அதிகசுமைஏற்றி மாடுகளையும், குதிரைகளையும் கட்டி ஓட்டுவதும், பன்றிகளைக் கால்களையும், வாயையும் கட்டித் தலைகீழாகத் தூக்கிச்செல்வதும், எந்தப் பிராணியையும் சூடுபோடுவதும், குரூரமாய்க் கொல்வதும், பட்சிகளைப் பிடிப்பதற்காக பிசின் அலகு போடுவதும், பட்சியின் கண்ணைத் தைத்து விடுவதும், தக்க ஆகாரமில்லாமல் பட்டினி போடுவதும், கழுதைகளை முட்டிக்கால்தட்ட முதுகில் அதிக சுமை ஏற்றி ஓட்டுவதும், விரையில் உதைப்பதும், கண்ணில் பொடிபோடு

வது, வைக்கோலைக் கொளுத்தி நெருப்பினால் சுடுவதும் இன்னும் இவை போன்ற இம்சையைச் செய்பவர்களும், செய்ய அனுமதி கொடுக்கும் சொந்தக்காரர்களும் 1890-௵ இந்தியா ஆக்ட் XI-ன் பலதிறப்பட்ட உள் பிரிவுகளின்படி பலதிறப்பட்ட அபராதத்திற்கும் அல்லது காவலுக்கும் அல்லது இரண்டிற்கும் உள்ளாவார்கள். மேற்கூறியபடி பிராணிகளை இம்சிப்பவர்களை சார்ஜ் செய்யவும் அரஸ்டு செய்யவும் எஸ். பி. சி. ஏ. இன்ஸ்பெக்டர்கள் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். கிராமவாசிகளும் இதை முக்கியமாய் அறியவேண்டியது. ஷை குற்றங்களுக்கு ஒருவரும் ஆளாகாமலிருக்கும்படி இதன்மூலம் எச்சரிக்கை செய்கிறோம்.

பால் வியாபாரத்திற்காக அல்லது சொந்த உபயோகத்திற்காக கறவை பசுமாடுகள் அல்லது கறவை எருமை மாடுகள் வைத்திருப்பவர்கள் அறிய வேண்டிய விஷயம் என்னவென்றால்,

இந்த தாலூகாவில் நிலையாக வசித்தோ அல்லது சுற்று கிராமங்களிலிருந்து தினந்தோறும் டவுனுக்கு வந்தோ பால் விற்பவர்களில் சிலரிடமுள்ள கன்றுக்குட்டிகள் போதுமானபால் கொடாததாலும், மிகவும் இளங்கன்றுகளானபடியால் இதர ஆகாரங்களை உண்ணத் திராணியற்றதாலும் மிகவும் இளைத்தும் மெலிவாகவும் வியாதிபட்டும் இருப்பதாக இந்த சங்கத்தார் அறிகிறார்கள். "இவ்வாறு பட்டினியால் வருந்தும் கன்றுகளை வைத்திருத்தல், விற்பனை செய்தல் அல்லது தெருக்களில் ஓட்டிச்செல்லுதல்" முதலியன 1890-௵ XI-வது ஆக்ட், செக்ஷன் III-ன் படி ஜீவஹிம்சை என்ற குற்றமாக கருதப்பட்டு, ஷை குற்றங்களை செய்பவர் ரூ 50/- வரைக்கும் அபராதம், அல்லது ஒரு மாத காவல் அல்லது இவ்விருவகை தண்டனைக்கும் உள்ளாவார்கள். முதல் குற்றம் நடந்த மூன்று வருஷத்திற்குள் மறுபடியும் இதுபோன்ற ஜீவஹிம்சையை செய்பவர்கள் ரூ 100 அபராதம் அல்லது மூன்றுமாத காவல் அல்லது இவ்விருவகை தண்டனைக்கும் உள்ளாவார்கள் என்பதை தெரிவிக்கப்படுகிறது.

கன்றை இழந்த ஏதாவது பசுமாடு, அல்லது யாதாமொரு பால் மிருகத்தை பால்கறக்கும் பொருட்டோ, அல்லது அவற்றை அடக்குவதன் பொருட்டோ அதன் எதிரில் போலிக் கன்றுகளை சிற்சில சமயங்களில் நிறுத்தியும், அந்த மாட்டின் மர்மஸ்தானத்தில் குழாய்களின் மூலம் காத்து ஊதுவதும், மிளகு, மிளகாய் முதலிய காரமான வஸ்த்துவை பொடி செய்து துணியிலோ, வைக்கோலிலோ வைத்து வைத்தலும் கையை செலுத்துதலும் இன்னும் இவைபோன்ற முறையில் "முடிவைப்பவர்

களும், முடிவைப்பதற்கு உதவி செய்பவர்களும், முடிவைக்க அனுமதி கொடுக்கும் மிருகத்தின் சொந்தக்காரர்களும்" 1890-ம் வருஷத்திய ஆக்ட் XI Sect. IV-ன் படி ரூ 500 வரையில் அபராதமும் அல்லது 2 வருஷம் காவலுக்கும் அல்லது இரண்டிற்கும் உள்ளாவதுடன் மிருகத்தின் சொந்தக்காரரிடமிருந்து மிருகத்தை சர்க்காரால் கைப்பற்றப்படும்.

இந்த குற்றம் நடப்பதைக் குறித்து எங்களுக்கு தாக்கல் தெரிவிப்பவர்களுக்கு அபராதத்தில் பத்தில் ஒருபாகம் வரையில் ரிவார்டு கொடுக்கப்படும்.

மிருகங்களின் எடையில்பாதி பொதியாகவும், இரும்புக்கட்டுப்போட்ட வண்டிகளில் இழுவை பாரமாக அதில் கட்டியிருக்கும் மாடுகளின் எடையைப்போல் இரண்டு மடங்கும் ரப்பர்டயர்போட்ட வண்டிகளில் இழுவை பாரமாக அதில் கட்டியிருக்கும் மாடுகளின் எடையைப்போல் நான்கு மடங்கும் ஏற்றலாம். இந்த அளவுக்குமேல் ஏற்றுதல் 1890-ளு XI-வது ஆக்ட் செக்ஷன் III A. (1) படி குற்றமாக கருதப்பட்டு ரூ. 50 வரைக்கும் அபராதம் அல்லது ஒருமாத காவல் தண்டனைக்கும் உள்ளாவார்கள். அவ்வாறு அதிக பாரம் ஏற்றப்பட்ட மிருகங்களின் சொந்தக்காரர்களை அவர்களே அதிக பாரம் ஏற்றி ஷை மிருகங்களை இம்சை செய்ய அனுமதி கொடுத்ததாய்க் கருதி அவர்களையும் அல்லது அவ்வாறு அதிக பாரம் ஏற்றி தன் மேற்பார்வையிலோ அல்லது தனக்கு கீழாகவோ வேலை வாங்கும் வியாபாரி அல்லது சாமான்களை எடுத்து செல்பவரையோ அல்லது ஒப்பந்தக்காரரையோ (புரோக்கரும், கண்டிராக்டரும்) அல்லது ஷை யார்களால் அனுமதிக்கப்பட்ட வேலைக்காரர்களாகஇருந்தாலும் அவர்களையும் 1890ளு XI-வது ஆக்ட் செக்ஷன் III A. (2) படி குற்றவாளிகளாகக் கருதப்பட்டு அன்னவர்களுக்கு ரூ 100 வரை அபராதம் விதிக்கப்படும்.

எருமை மாடுகளை, வண்டி, செக்கு, ஏர் முதலியவற்றில் பகல் 12. மணியிலிருந்து 3-30 மணி வரையில் கட்டி வேலை செய்யக் கூடாது. அப்படி செய்பவர்களை Sect. 15. (2) (c) படி சார்ஜ் செய்யப்படும். அபராதம் ரூ 50 வரையில் விதிக்கப்படும்.

பறவை, நாய் பிற ஜந்து இவைகளை சிறுபிள்ளைகள் தொந்திரவு செய்வதையும் அவைகளின் மேல் கல் எறிவதையும் நீங்கள் பார்த்தால் தயவுசெய்து அப்படி செய்யாதே அப்பா! என்று கூறுங்கள்.

குதிரை, வண்டிமாடு, செக்குமாடு, கறவைமாடு, கழுதை இவை

கள் வண்டிக்காரரால் அல்லது சொந்தக்காரரால் அல்லது பிறரால் அடிக்கப் படுவதை நீங்கள் பார்த்தால் தயவு செய்து அடிக்காதே அய்யா! என்று சொல்லுங்கள்.

குதிரை, வண்டி மாடு, செக்கு மாடு, கறவை மாடு, கழுதை இவைகள் தாகமாய் இருப்பதை நீங்கள் பார்த்தால் தண்ணீர் குடிப்பாட்டும்படி வண்டிக்காரரிடமோ அல்லது அவற்றின் சொந்தக்காரரிடமோ அல்லது அம்மிருகம் அச்சமயம் யாரிடமிருக்கிறதோ அவரிடம் சொல்லுங்கள்.

குதிரை, வண்டிமாடு, செக்குமாடு, கறவை மாடு, கழுதை இவைகள் வெய்யிலில் நிறுத்தப்பட்டிருப்பதை நீங்கள் பார்த்தால் தயவு செய்து, நிழலில் ஓட்டி நிறுத்துங்கள் என்று கூறுங்கள்.

குதிரை, வண்டிமாடு, செக்குமாடு கறவை மாடு, கழுதை இவைகள் நொண்டும்போதும் புண், கால், கழுத்து வீக்கம் முதலிய பிற நோயால் வருந்தும்போதும் நீங்கள் பார்த்தால் தயவுசெய்து வண்டியை அவிழ்த்து விடுங்கள். மன்னார்குடி **கவர்ன்மெண்டு மிருக வைத்திய சாலையில்** மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய்க்கு மேற்படாத வருமானமுள்ளவர்களின் மிருகங்களுக்கு இலவச மருந்து போடுகிறார்கள். இவைகளை அழைத்துக் கொண்டு அங்கே போய் மருந்து போட்டுக் கொள்ளுங்கள் என்று கூறுங்கள்.

குதிரை, மாடுகள், கழுதை இவைகளில் பொதியாகவோ, அல்லது இழுவை பாரமாகவோ அவற்றைப் பூட்டி இருக்கும் வண்டி முதலிய வாகனங்களில் அதிக பாரம் ஏற்றியிருப்பதை நீங்கள் கண்டால் உடனே பளுவை குறைக்கச் சொல்லுங்கள்.

நீங்கள் நல்ல வழியில் சொல்வதை அவர்கள் கேட்காவிட்டால் தயவு செய்து *S P. C. A.* ஏஜண்டிடம், (இன்ஸ்பெக்டர்) நேரில் சொல்லுங்கள், அல்லது வாயில்லாத ஜீவன்களை வருத்துகிறவர்களின் பெயர், தகப்பன் பெயர் விலாசம் முதலியவற்றையும் மிருகத்தின்சொந்தக்காரரின் பெயர், தகப்பன்பெயர், விலாசம் முதலியவற்றையும். இன்னொரு சாட்சியையும் குறித்து தயவுசெய்து **"மன்னார்குடி S. P. C. A. ஜாயிண்டு செக்கரேட்டரி"** என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

வாயில்லாத ஜீவன்களை வளர்ப்பவர்களே!

உங்களுக்கு வேண்டியிருப்பது போல் மிருகங்களுக்கும் வேளா வேளைக்கு வயிற்றுக்கு போதுமான உணவு வேண்டும். தாகம் எடுத்த போது தண்ணீர் குடிக்கவேண்டும். வேலைசெய்த நோய்தீர படுத்திருக்க வேண்டும். உறங்க வசதிவேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள்.

உங்களுக்கு இருப்பது போல மிருகங்களுக்கும் அவைகளினுடைய குழந்தைகளின் சுகதுக்கங்களை அனுபவிக்கிற உணர்ச்சி இருக்கிறது என்பது ஞாபகம் இருக்கட்டும்.

மிருகங்களை அனாவசியமாக அடிக்காதீர்கள். மழையில் வண்டியில் கட்டி துன்பம் செய்யாதீர்கள். வாலை முறுக்காதீர்கள். வண்டியில் பூட்டி விட்டு அப்படியே அனாவசியமாக நிறுத்திவைத்து விடாதீர்கள். வெய்யிலிலே நிறுத்தி துன்புறுத்தாதீர்கள்.

நொண்டும்போதும், நோயால் வருந்தும்போதும், புண்ணாலும், காயத்தாலும் கஷ்டப்படும்போதும் வண்டியில் கட்டிவருத்தாதேயுங்கள்.

உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும் கடவுள் சிசுக்களே. ஆகையால் வாயில்லாத ஜீவன்களை, பேசத்திறனற்ற ஊமைப்பிராணிகளை, பட்டினி போடாதீர்கள். அடிக்காதீர்கள். விரட்டாதீர்கள். கூரான முள்கோலை கொண்டு குத்தாதீர்கள்.

இப்படிச் செய்வதினால் உங்களுக்கே கஷ்டம் நேரும். இவ்வாறு வருத்தப்பட்ட ஜீவன்கள் நீண்ட காலம் கஷ்டப்பட்டு நல்ல வேலை செய்யாமற்போகும்.

அப்போதைக்கப்போது வேண்டிய சிகிச்சைகளைச்செய்து வேண்டிய சவுகரியங்களுடன் வைத்திருந்தால் மிருகங்கள் பல வருஷகாலம் நன்றாய் உழைக்கும். அதனால் இது உங்களுக்கு லாபகரமாயும் இருக்கும்.

மேலே கண்டுள்ள குற்றங்களைச் செய்கிறவர்கள் பாபத்துக்குள்ளாகிறதுடன் P. C. A. சட்டப்படி கோர்ட்டு தண்டனைக்கும் உட்படுவார்கள். ஆகையால் இந்த கொடிய வழக்கத்தை அடியோடு நிறுத்த ஒவ்வொருவரும் முயலும்படியாக கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஜீவகாருண்ய முள்ளவர்களும் இத் துர்வழக்கத்தைக் காணும்போதெல்லாம்

அப்படி செய்பவர்களுக்கு நற்புத்தி புகட்டி இக்கொடிய செயலை நிறுத்த முயல்வார்களென்று நம்புகிறோம்.

சில இரக்கமற்றவர்கள் பறவைகளின் கண்களை தைத்து அவைகளைக் குருடாக்கி, ஓரிடத்தில் விட்டு விடுகிறார்கள். அவைகள் கண் தெரியாமல் தலை கவிழ்ந்து பூமியில் கிடக்கின்றன. அவைகளைச் சுற்றிலும் கண்ணி, அல்லது வலை விரிக்கப்பட்டிருக்கும் இந்த பறவைகளைப் பார்க்கும் மற்றப்பறவைகள் ஏமாந்து போய் பூமியில் இறங்கி கண்ணியில் அல்லது வலையில் சிக்கிக்கொள்ளும். இவ்வாறு பறவைகளை வஞ்சிக்கும் செயலும் பண்டிகைகளின் போது புலிவேஷம் போடுகிறவர்கள் உயிருள்ள ஆட்டை முதுகில் கௌவி அப்பால் எறிவதும், தோல்கள் அறுபடாமல் முழுதாகவும் பெரிதாகவும் இருப்பதற்காக ஆடு மாடுகளை உயிருடன் தோலுரிப்பதும், கோழிச்சண்டை, ஆட்டுச்சண்டை மாட்டுச்சண்டை முதலிய விடுவதும் உணவிற்காக பிராணிகளைக் கொல்ல அதனை காலைப்பிடித்து இழுத்து செல்வதும், 1890 ம் வருஷத்திய XI ஆக்டுபடி குற்றங்களாகும்.

தனது குறையை நிவர்த்தித்துக் கொள்வதற்காக யாதொரு மிருகத்தை அல்லது பக்ஷியை யாதொரு தெய்வத்தை அல்லது தேவதையை சாந்தப்படுத்தவோ அல்லது திருப்திப் படுத்தவோ யாரும் வதைப்பது அல்லது கொல்வது கூடாது என்று **1948 ம் வருஷத்திய சென்னை பலி விலக்கு மசோதாவால் தடுக்கப்பட்டிருக்கிறது.** அப்படி பலியிடுபவருக்கு ரூ 300 வரை அபராதம் விதிக்கப்படும். பலிநடத்த அத்தெய்வத்திற்கு அர்ச்சகராகவோ அல்லது பூசாரியாகவோ அல்லது சேவகனாகவோ யாரும் வேலை செய்யக்கூடாது. அப்படிப்பட்டவர்களுக்கு ரூ 300 அபராதமும் 3 மாதக்காவல் தண்டனையும் விதிக்கப்படும். பலியிடப்படும் தெய்வ சுற்றெல்லையிலுள்ள நிலத்தையோ அல்லது கட்டிடத்தையோ அனுபவத்தில் பெற்றிருப்பவர்கள் ரூ 300 அபராதமும் 3 மாதக்காவல் தண்டனையும் விதிக்கப்படுவர். ஆகையால் இதைக் கண்ணுறும் பொதுமக்கள் அனைவரும் இச்சிறு புத்தகத்தில் விளக்கப் பெற்றுள்ள குற்றங்கள் நடைபெறாது தங்களால் ஆன முயற்சிகள் செய்ய கோரப்படுகிறார்கள். அன்னவர்களின் முயற்சி வெற்றி பெறாது எனத்தோன்றினால் தயவுசெய்து விஷயத்தை **மன்னார்குடி S. P. C. A ஜாயிண்டு செக்கரெட்டேரி** அவர்களுக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ முன்னதாகவே அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சீவகா ருண்ய முள்ளான் செறியுயிர் நண்பனுவான்
சீவகா ருண்ய முள்ளான் செகமதிற் றேவனுவான்
சீவகா ருண்ய முள்ளான் செல்கிழல் உலகஞ் செல்லும்
சீவகா ருண்ய முள்ளான்தேர்பொருள் எல்லா மாகும்.

சீவகா ருண்ய மில்லார் செயுந்தவ மவமாய்ப் போகும்
சீவகா ருண்ய மில்லார் செயுமற மறம தாகும்
சீவகா ருண்ய மில்லார் சேருவ ரந்த காரம்
சீவகா ருண்ய மில்லார் தீமைசெய் திருத ராமே.

(பக்த விஜயம்)

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணுமை நன்று.

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி. (திருக்குறள்)

எல்லா விரத மியல்பொக்கு மாயினு
மல்லா விரத மனையா யவர்கட்குக்
கொல்லா விரதங் குடைமன்ன! வாமெனின்
வெல்லா வகையில்லை வீங்கெழிற் றோளாய்.

(சூளாமணி)

துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு. (நாலடியார்)

தன் னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோன்
மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனு யின்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந் துயர்ந்து போகுமே.

(சீவக சிந்தாமணி)

கொன்றுன் கொலச்சொன்னுன் கூசவறுத்தா னட்டான்
தின்றுன் விலக்கிடான் சென்றுென்று கொன்றவனைக்
குட்டவங்க ளிட்டெரிக்க வெந்துகொடு வெந்நரகிற்
பட்டழுன்று விழ்வார் பதைத்து.

(பெருந்தேவனுர் பாரதம்)

நம்மைப் படைத்த தெய்வங்கள் உயிர்ப்பலி விரும்பவில்லை என்பதற்கு ஆதாரமாக பழய புராணங்களிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு கதைகள் மேற்கோளாக கொடுத்திருப்பதை படித்துணர வேண்டுகிறோம்.

1. அங்காளி, மாரி, பிடாரி, காளி, அய்யனர் முதலியதெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுத்தால், மேற்கண்ட தெய்வங்கள் திருப்தி அடைந்து நாட்டைக்காக்கும் என்னும் மட எண்ணமுள்ள ஒரு அரசனும் மந்திரியும் நரபலி இடுவதற்காக பல இடங்களிலும் சுற்றி ஏழைமக்களிடம் ஏராள பொன் கொடுப்பதாகக்கூறியும் ஒருவரும் பொருளைப் பெற்றுக்கொண்டு நரபலி இடுவதற்காக ஒருவரையும் கொடுக்க முன்வரவில்லை. ஆகையால் அரசனும் மந்திரியும் பூசாரிக்கிழவனை அடைந்து,

"ஐயா பூசாரியே அம்மனருள் பெற்றவரே
அடைந்தோம் அடைக்கலமாய் அடியேங்க ளன்பாதம்
ஐம்பதி னயிரம்பொன் அளிக்கின்றோ முன்றனுக்கே
அம்மனுக் குப்பலியாய் ஐயாநீ யாகவேண்டும்
காளிக்குப் பலியாகக் களித்துநீ யாகவேண்டும்
தேவிக்குப் பலியாகத் தீரமாய் வரவேண்டும்.
பொன்னை மிகக்கொடுத்துன் புத்திரரைக் காக்கின்றோம்
வறுமையை யோட்டுகின்றோம் வள்ளல்களாய்ச் செய்கின்றோம்
குறைவின்றிப் பொருள்தந்து குடும்பத்தைக் காக்கின்றோம்
என்று மொழிந்தார்கள் இரக்க முகத்தோடே
வணங்கி மொழிந்தார்கள் வாடிய முகத்தோடே
கேட்டான் கிழவனும் கிளம்பினன் வேகமாய்
ஓடினன் அம்மனிடம் ஓவெனக் கூவியே
பாவியே என்றனையே பலிகேட்க வந்தாயோ
தேவியே என்றனையே தீர்த்திட வந்தாயோ
ஐந்து வயதுமுதல் ஐம்பது வயதளவும்
அம்மணி யுன்தனுக்கு அடிவணங்கி பூஜித்தேன்.
ஆடு மாடு பலிகள் ஆயிர மாகத்தந்தேன்.
கோழி கழுத்தறுத்துக் கொடுத்தேன் ரத்தமுனக்கு
எருமை கடாவெட்டி ஈந்தேன் ரத்தமுனக்கு
என்று அழுதுகொண்டே ஏந்திய கையனுகி
ஓங்கி யடித்திட்டான் உருவத்தின் தாடையிலே
கதறி யடித்திட்டான் காளியின் தாடையிலே
பதறி யடித்திட்டான் பாவி யென்றுகூறி.

(புகழேந்தி புலவர் இயற்றிய மாரியம்மன் திருவாய்மொழி)

அப்போது அசரீரி "நீ என்னை தெய்வமென்று எண்ணமல் உன் வயிற்றுப் பிழைப்பிற்காக மக்களை ஏமாற்றி நான் பலியால் திருப்தி அடைவதாகக்கூறி ஆடுகளை இரட்டை இரட்டையாகப் பலிகொடுத்தாய், அவ்வாறு உன்னல் பலியிடப்பட்ட ஆடுகளின் ஆத்மாக்களே அரசனும் மந்திரியுமாய் உன்னைக் கொல்வதற்காகவே பிறந்து வந்திருக்கின்றன. ஆகையால் இன்று முதலாவது நீ தெய்வம் பலி விரும்பாது என்பதை அறிந்துகொள்" என்று சொன்னதைக்கேட்ட அரசன் பூசாரியைக் கொல்லாமல் விட்டுவிட்டான். நாடு முழுவதிலுமே தெய்வங்களுக்கு பலி இடலாகாது என்ற சட்டமும் பிறப்பித்தான். அன்று முதல் அந்நாட்டில் தெய்வங்களுக்கு பலியிடும் முறை அறவே ஒழிந்தது.

2. மகத தேசத்தை ஆண்ட அஞ்சனவீரன் என்னும் அரசன் பிரதி வருஷமும் ஆடிமாதத்தில் நகரதேவதைக்கு பலிகள் இட்டு வணங்குபவன். பழக்கம்போல் ஆடிமாதத்தில் பூஜைக்கு ஏற்பாடு செய்து எல்லா குடிஜனங்களையும் ஆளுக்கொரு உயிர்ச் சீவனுடன் பலியிட வரும்படியாக பறையடித்தான். குறிப்பிட்ட பூஜை தேதியில் குடிஜனங்கள் எல்லோரும் அவரவர்கள் சக்திக்கு ஏற்றவாறு மாடு, ஆடு, கோழி முதலியவற்றுடனும் மற்றபூஜைக்குவேண்டிய பொங்கல், மாவிளக்கு சாமான்களுடனும் வந்து சேர்ந்தார்கள். கோவிலைச்சுற்றிலும் அடுப்புகள் வெட்டி பெண்மணிகள் குளித்து ஈரத்துணியுடன் பொங்கலிட்டுக் கொண்டிருந்தார்கள். மற்றுஞ்சிலர் மாவிளக்கு தயார் செய்தார்கள். கோவிலில் சரவிளக்குகள் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது. மெய்க்காவலர்கள் அவ்விளக்குகளுக்கு நெய்யிட்டு விளக்கை தூண்டி விட்டுக் கொண்டிருந்தார்கள். சந்நதியில் பம்பை, சிலம்பு, பாட்டுகள் முழங்கிக் கொண்டிருந்தது. இரண்டொருவர் தெய்வம் அவர்கள் மேல் வந்து ஆவேசம் ஆடுவதைப்போல் பாமரமக்களுக்கு தெரியும்பொருட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தினரைப் பார்த்து அரசன் "ஐயா! தயவு செய்து அம்மனுக்கு பலியிட யாராவது ஒரு குழந்தையைத் தாருங்கள்" எனக்கேட்டான். ஒருவரும் பெற்ற குழந்தையைக் கொடுக்க முன்வரவில்லை. ஆகையால் அரசன் பத்தாயிரம் பொன்னைக் காட்டி 'இதனைப்பெற்றுக்கொண்டு ஒரு மைந்தனைக்கொடுங்கள்" எனப்பரிவுடன் கேட்க அக்கூட்டத்திலிருந்த மூன்று பிள்ளைகளுடைய ஒருவன், தான்பெற்ற பாலகன்களைக்காப்பாற்ற முடியாத ஏழை, அப்பத்தாயிரம் பொன்னையும் பெற்றுக் கொண்டு தன் இரண்டாவது பிள்ளையைப் பலியிடுவதற்காகக் கொடுத்து

விட்டான் அப்பிள்ளையைக் குளிப்பாட்டி, பொட்டிட்டு, மாலையிட்டு பம்பை சிலம்பு பறைமேளங்கள் சப்திக்க, சாம்பிராணி புகை வானளாவ கும்மி, கோலாட்டம் சாவடி முதலிய பாட்டுச் சப்தங்கள் காதுகள் செவிடுபட பையனை நடுவே நிறுத்தி அரசன் ஏந்திய வாளுடன் பூசாரிகளுடன் எதிரில் வந்தான். அரசன் பலியிடப்போகும் பையனை நோக்கி "தம்பி உன்னை அம்மனுக்கு பலியிடப்போகின்றோம் உன்பலியை ஏற்று அரசனையும் மற்ற குடிபடைகளையும் காப்பாற்று என்று தேவியை வணங்கி தலை குனி" எனக்கூறினன்.

பையன் சற்றுசிந்தித்து பெருஞ்சிரிப்பு சிரித்தான். அரசன் பையனை நோக்கி "தம்பி இன்னும் சிறிது நேரத்தில் வெட்டப்பட்டு உன் தலையும் உடலும் வெவ்வேறாக தரையில் உருளப் போகிறது. நீ சிரித்த காரணத்தைக்கூறு எனக் கேட்க, பையன் சொல்லுகின்றான் "அன்புமிக்க அரசே, இங்கு கூடிஇருக்கும் பேரன்பும், மூடபக்தியும், குருட்டு நம்பிக்கையும் கொண்ட பெருங்குடி மக்களே, பிள்ளைகளைப் பெற்றோர்கள் பிரியமுடன் வளர்ப்பது கடமை என்று எண்ணாது பணத்தாசையாலே என்னை பலிக்கு விற்றார்கள். என்னைப்பெற்றோர் இக்கூட்டத்தில் இருந்தும் நான் பெற்றோர் அற்றவனாகி விட்டேன். அடுத்தபடியாக ஆபத்துக்குள்ளாகி அவதியுறும் அனாதைகளைக் காப்பது அரசன் கடமை. ஆகையால் அவ்வரசன் காப்பாற்றுவான் எனஎண்ணும் போது வேலி பயிரையும், சமுத்திரம் பூமியையும் அழிப்பது போல் அரசன் என்னைக் கொல்ல வாளேந்தி நிற்கின்றான். பெற்றோரையும் அரசனையும் அற்ற திக்கற்றவர்களுக்கு தெய்வம் துணைசெய்யும் என எண்ணும்போது தெய்வம் என்னைப்பலியாய் கேட்டது என்ற சொல் இடிவிழுந்த சர்ப்பம்போல் என் காதில் விழுந்தது. எல்லா உயிர்களையும் இரட்சிக்கும் தெய்வம் என்னைப் பலிகேட்டது என்றதனாலே நான் பெற்றோர், அரசன், தெய்வம் இம்மூன்றும் அற்ற எல்லோராலும் கைவிடப்பட்ட, கேட்பாரற்ற, கிளைகற்ற முழுமோசப்பாவி. ஆகையால் நான் அழுதோ, துடித்தோ, தொழுதோ பயனில்லை. இறப்பதே மேல் என்று சிரித்தேன்" கூறினன். அப்போது அசரீரி "எல்லா உயிர்களுக்கும் கடவுள் ஒருவர்தான். அவருக்கு பிறப்பு, இறப்பு, பகை, நட்பு, பசி, தாகம் முதலியவை கிடையாது அவர் உருவ றுவத்திருமேனி எல்லா உயிர்களிலும் இலங்கிடுவார். கருணை, அன்பு, அருள் உடையது தெய்வம். உலகில் கண்கண்ட தெய்வங்களாகிய பூமி, சூரியன், சந்திரன், வருணன், வாயு இவைகள் உலகின் சீவராசி

களை ஏற்றத்தாழ்வின்றி, பாரபக்ஷமின்றி கருணையுடன் காத்துவா கண்ணால் காணாத இன்று நாம் பூசைக்கு வந்திருக்கும். இத்தெய்வங்கள் கழுத்தறுக்கச் சொல்லினவா? இல்லை ஆசையால் பகுத்தறிவின்றி பணத்தாசை பேய்பிடித்த பழிகாரப் பூசாரிகளின் சொல்லையும் ஆவேசத்தையும் நம்பி உயிர்க்கொலை செய்யாதீர்கள். எந்த தெய்வமும் பலியை விரும்பாது. ஏழை ஆத்மாக்கள் அழுத கண்ணீர் கூரிய வாளை யொக்கும். அப்பாவி பூசாரிகளும் மருளாளிகளும், வாந்திபேதி பிளேக் வைசூரி என்னும் தொத்து நோய்களை காட்டி மக்களை பயக்குவார்கள். நீங்கள் ஏமாறாமல் தெய்வங்களுக்கு உயிர்ப்பலி இடுதல் என்னும் கண்மூடி வழக்கங்களை எல்லாம் மண்மூட விடுங்கள்,, எனக்கூறியதைக் கேட்ட அரசனும் குடிபடைகளும், அங்கு அன்று பலிக்காக கொண்டு வரப்பட்டிருந்த பல-ஊமைப்பிராணிகளையும் பலியிடாது விடுவித்து பாவிளக்குடன் பாற்பொங்கல் மட்டும் செய்து தேவியை வழிபட்டார்கள். அன்றுமுதல் அந்நாட்டில் ஒழிந்தது உயிர்ப்பலி. ஜீவகாருண்யம் தலை சிறந்தோங்கியது. ஆகையால் பொதுமக்களே அவர்களைப் பின்பற்றுங்கள். மேலும் உங்கள் ஊரில் ஏதாவது வியாதி கண்டால், அதனை நம் பண்டைக்கால மருத்துவ நூல் வல்லவர்கள் வன்மூலிகைகளால் பலவகை மருந்துகள் செய்து வைத்தியம் செய்ய லாயக்குள்ளவர் என்று சர்க்கார் நற்சாக்ஷி பெற்றவரையோ அல்லது மேல்நாட்டு முறையில் வைத்தியத்தில் தேர்ந்து பட்டம் பெற்ற அனுபவசாலிகளான இங்கிலீஷ் முறை டாக்டர்களையோ அல்லது சர்க்கார் சுகாதார உத்தியோகஸ்தர்களுக்கோ காலாகாலத்தில் தெரிவித்து மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் உண்டாகும் நோய்களை தீர்க்க முற்படுங்கள். வியாதிகள் கிருமிகளால் உண்டாவதாக கண்டுபிடிக்கப்பட்டிருப்பதை மனதில் வையுங்கள்.

மன்னார்குடி
22—4—49

S. P. C. A. நிர்வாகிகள்.

எல்லா ஜீவன்களையும் உன்னைப்போல் கருது எவ்வுயிர்க்கும் தீமை செய்யாதே. எவ்விடத்தும் கொலை நீத்து (மகாவீரர் ஜைனர்)

என்னால் படைக்கப்பட்ட என் குழந்தைகளாகிய ஊமை உயிர்ப்பிராணிகளை எதன் பொருட்டாக என்முன் பலியிடுகின்றீர்கள்? நான் மாடு, ஆடு, கோழி முதலிய உயிர்ப்பிராணிகளின் இரத்தத்தினால் சந்தோஷம் அடைபவன் அல்லன். (ரோம் மதக் கடவுள்)

பாமரமக்களால் விக்கிரகங்களின் முன் படைக்கப்பட்ட பாமிசம், இரத்தம் முதலியனவற்றைக் கடவுள் ஏற்றுக்கொள்ளாமலிருக்கின்றார். (ஏகநாதர்)

தனது குறையை நிவர்த்தித்துக் கொள்வதற்காக ஒரு ஊமைப் பிராணியின் உயிரை யாகத்தினாலோ, பலியினாலோ கொன்றானேயானால் அவன் பெரிய தபசியாயினும் தன் தவத்தின் பயனை இழப்பதோடு நரகத்திற்கு ஆளாவான். (பாரதம்)

பகுத்தறிவு படைத்த பெரியோர்களே, பேரன்பு மிக்க பொதுமக்களே! உணர்ச்சியுள்ள, பேசத்திறனற்ற உயிர்ச்சீவன்களை, மனிதர்களால், வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு, பற்பல ரூபங்களில் செய்யப்பட்டு, பற்பல இடங்களில், பற்பல பெயர்களுடன், நாட்டப்பெற்ற, உணர்ச்சியற்ற, கல்சிலைகளுக்கு, மனிதர்கள் ஆவேசம் ஆடிடுவதை, தெய்வம் என்றுநம்பி பலியிடலாகுமா? ஆகாது, "நாடாது மனிதர்மேல்தெய்வம் என்றும், நம் பெரியோர் தெய்வ ஆவேசம் நம்பிடில் நடுவரோ தெய்வமாய் கல்லை எங்கும்" என்பதையும் பலி விலக்கு சட்டம் அமுலிலிருப்பதையும் உணர்ந்து தெய்வத்தின் பெயரால் இன்று முதல் உயிர் பலி இடாதீர்கள். எந்த தெய்வமும் இரத்தத்தையும், மாமிசத்தையும் விரும்பாது, ஆகையால் பால் பொங்கல் படையுங்கள்.

கொலையாதி நெறியகன்ற ஞானந் தானே
 கூறரிய மேலான ஞான மாகும்
கொலையாதி யகன்றொழுகுந் தவங்க டாமே
 குற்றமிலா நற்றவமென் றுரைக்கு நூலுங்
கொலையாதி யகற்றியநல் லறங்க டாமே
 குவலயத்தி லொப்பரிய வறங்க ளாகும்
கொலையாதி யகன்றபெருஞ் செல்வந் தானே
 கூறிலுயிர்க் கிதமான வாழ்வ தாமே.

அகிம்சா பரமோ தர்ம:

1 மதத்தின் பெயரால் உயிர்ப்பிராணிகளைப் பலியிடுதல்காட்டு மிராண்டித் தனத்தின் கையிருப்பு.

குறிப்பு:- (கையிருப்பு என்றால் நம்மிடமிருந்த அநாகரீகப் பழக்க வழக்கங்களில் ஒழிந்தனபோக பாக்கி இருப்பவை.)

2 பலி இடும்படி கூறுகின்ற சாஸ்திரங்கள் கிடையா. அவ்வாறு எதாகிலும் இருப்பின் அவை சாஸ்திரங்களாக கருதப் படமாட்டா.

(ஒப்பம்) காந்தி.

கோவில்களில் பலி இடுதல் மிலேச்சத்தனமென்றும், மதத்திற்கு இழுக்காகுமென்றும் நம்புகிறேன்.

(ஒப்பம்) ஜவஹர்லால்நேரு.

மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள். (கவி சுப்பிரமணிய பாரதியார்)

ஓர் வேண்டுகோள்.

இந்த தாலுகா வாசிகள் அனைவரும் தயவு செய்து இந்த சங்கத்தில் ஒரு சாதாரண அங்கத்தினராகவோ அல்லது ஆயுள் கால அங்கத்தினராகவோ சேர்ந்து இச்சங்கத்தின் கொள்கைகளை ஆதரிக்க வேண்டுகிறோம். மேலும் இந்நகரில் வண்டிகள் நிற்க (Cart stand) வண்டிப்பேட்டைகளும் வயோதிக மாடுகளை வைத்து வளர்க்க (Pinjrapole) பசுமடமும் இன்னும் பல முக்கிய முன்னேற்ற காரியங்களும் செய்யவேண்டியிருப்பதால் இதைக் கண்ணுறும் கனதனவான்கள் அனைவரும் பெருவாரியாக பொருளுதவி செய்து வாயில்லாத ஊமைப் பிராணிகளை காப்பாற்ற வேண்டுகிறோம்.

S. P. C. A. நிர்வாகிகள்.

மன்னார்குடி பிரஸ் லிமிடெட், மன்னார்குடி. C. 4000